2022 ஏப்ரல் 28]

திரு. S. சேகர்: *அதிருப்தியாக இருக்கிறது என்று தெரிவித்துக்கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பளித்த, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு கருத்து, நாகர்கோவில் சரகத்தில் கைத்தறித் துறை அலுவலகம் இருக்கிறது. ஆனால், அதை திருநெல்வேலி சரகத்துடன் இணைத்துவிட்டார்கள். அதை தனித் தனியாக அமைத்தால்தான் எல்லா தொழிலாளர்களுக்கும் வேலைவாய்ப்பு கிடைக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் உரையை முடித்துவிடுங்கள்.*

திரு. S. சேகர்: *அவை முன்னவர் அவர்கள், ஒரே ஒரு கருத்தை மட்டும் நான் சொல்லிவிடுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சொல்லிவிடுங்கள்.*

திரு. S. சேகர்: *என்னுடையது கன்னிப் பேச்சு,*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதனால்தான் உங்களுக்கு எந்தக் குறுக்கீடும் இல்லாமல் இருக்கிறது. இன்னும் ஒரு நிமிடத்தில் உங்கள் கருத்தைச் சொல்லிவிடுங்கள்.*

திரு. S. சேகர்: *நான் பேசிவிடுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றாகத்தான் ஆலோசனை சொல்கிறீர்கள்.*

திரு. S. சேகர்: *கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் தொகுதியில் காரமடை நகரில் புதிய சார்–பதிவாளர் அலுவலகம் ஏற்படுத்திக் கொடுக்குமாறு இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி வணக்கம். நன்றி, நன்றி, நன்றி.*

6. தமிழ்நாட்டில் ஜல்லிக்கட்டு தடை செய்யப்பட்டது மற்றும் மீண்டும் தொடர்ந்து நடத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* S.R. *இராஜா அவர்கள். மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லவேண்டுமா? அது* debate *ஆக மாறிவிடக் கூடாது. சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்களைப் பற்றி ஜல்லிக்கட்டு நாயகன் என்று சொன்னார். எத்தனை ஜல்லிக்கட்டுப் போட்டிகளில் அவர் கலந்துகொண்டார்; எத்தனை காளைகளை அடக்கினார்? (சிரிப்பலை)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S.R. இராஜா அவர்கள். (குறுக்கீடு) நீங்கள், இப்போதே அவர்களை ஜல்லிக்கட்டுக்கு அனுப்பலாம் என்று சொல்கிறீர்கள்.*

5. மானியக் கோரிக்கைகள், 2022–2023, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 17 –	**கைத்தறி மற்றும் துணிநூல்** *(***கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை***)*	—*தொடர்ச்சி*
(ஆ) கோரிக்கை எண் 18 –	**கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள்** *(***கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை***)*	
(இ) கோரிக்கை எண் 10 –	**வணிக வரிகள்** *(***வணிக வரி மற்றும் பதிவுத் துறை***)*	
(ஈ) கோரிக்கை எண் 11	**முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு** *(***வணிக வரி மற்றும் பதிவுத் துறை***)*	

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S.R. இராஜா அவர்கள்.*

திரு. S.R. இராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், என்ன சொல்லுங்கள்.*

எலச்சிப்பாளையம் ஒன்றியம், பெரிய மணலியில் ஆரம்ப சுகாதார நிலையத்தினைத் தரம் உயர்த்திக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொத்தனூர், வெங்கமேட்டுப் பகுதியிலுள்ள துவக்கப் பள்ளியில் மாணவர்கள் சேர்க்கை அதிகரித்து வருவதால், அந்தப் பள்ளியில் புதிய வகுப்பறைகள் அமைத்துக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி.*

6. தமிழ்நாட்டில் ஜல்லிக்கட்டு தடை செய்யப்பட்டது மற்றும் மீண்டும் தொடர்ந்து நடத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள். நீங்களெல்லாம் சேர்ந்து* debate *மாதிரி பேசுகிறீர்களா?*

***திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** *இல்லை. மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு பதில் சொல்லவேண்டியிருக்கிறது. மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது, இங்கே ஒன்றைச் சொன்னார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவர்கள் நகைச்சுவையாகச் சொன்னார்கள்.*

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *எத்தனை ஜல்லிக்கட்டுக்குப்போய் இருக்கிறார் என்று கேட்டார்கள். ஜல்லிக்கட்டு நடத்த முடியாது என்கிற நேரத்திலேதான், மத்திய அரசை அணுகி சட்டமன்றத்தில் தீர்மானத்தை நிறைவேற்றி, வெற்றி பெற்றவர்தான், நம்முடைய ஜல்லிக்கட்டு நாயகன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

பிற்பகல் 12–55

***மாண்புமிகு திரு. பி. மூர்த்தி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு. செங்கோட்டையன் அவர்கள். . .*

சத்யமேவ ஜயதே — TRUTH ALONE TRIUMPHS — LEGISLATIVE ASSEMBLY

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவர்களெல்லாம் ஒரே சொந்தம். நம்முடைய மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர், திரு. செங்கோட்டையன் இவர்களெல்லாம் சேர்ந்து* debate-*க்கு வருகிறார்கள். மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாமன்ற உறுப்பினர், அருமை அண்ணன் திரு. செங்கோட்டையன் அவர்கள் இங்கே ஒன்றைச் சொன்னார்கள். ஜல்லிக்கட்டே நடக்க முடியாததற்குக் காரணம் யாரென்று அண்ணனுக்குத் தெரியுமா, இல்லையா என்பது தெரியவில்லை. 2005 ஆம் ஆண்டு மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அம்மையார் அவர்கள் இருந்தபோது, இராமநாதபுரத்தில் நடந்த ரேக்ளா ரேஸுக்காக, அதைத் தடை செய்ய வேண்டுமென்று உயர் நீதிமன்ற மதுரை கிளையில் (குறுக்கீடு) நான் சொல்வது* recorded *ஆக இருக்கிறது. பிறகு தருகிறோம்—அந்த ரேக்ளா ரேஸுக்குத் தடை வேண்டும் என்று உயர் நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு தொடர்ந்தபோது, அப்போதிருந்த மாண்பமை நீதியரசர் பானுமதி அம்மையார் அவர்களால் அந்த ரேக்ளா ரேஸோடு சேர்த்து ஜல்லிக்கட்டிற்கும் தடை வழங்கப்பட்டது. (குறுக்கீடு) நாங்கள் தானே வாங்கினோம். அந்த ஜல்லிக்கட்டிற்குத் தடை வந்தபோது, மாண்புமிகு அம்மையார் அவர்கள் இனிமேல் நடக்கக்கூடிய எந்த ரேக்ளா ரேஸாக இருந்தாலும், ஜல்லிக்கட்டாக இருந்தாலும், அதற்கு அனுமதி வழங்கக் கூடாது என்று மாவட்டத்திலிருக்கக்கூடிய காவல் துறை அதிகாரிகளுக்கு ஓர் உத்தரவை வழங்கினார்கள். அந்த உத்தரவு வழங்கியதன் பேரிலே ஜல்லிக்கட்டு தடைபட்டது. ஜல்லிக்கட்டு தடைபட்டபோது, 2006 ஆம் ஆண்டு நான் சோழவந்தான் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது, மாண்புமிகு தமிழக முன்னாள் முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களால் உயர் நீதிமன்ற மதுரை கிளையில் வழக்குத் தொடரப்பட்டு, அந்த வழக்கிலே நாங்கள் வெற்றி பெற்று, ஜல்லிக்கட்டை நடத்தினோம். மீண்டும் பல ஆண்டுக் காலம்* Animal Welfare Board of India *உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து, அந்த வழக்கிலேயும், மறு ஆண்டு ஓர் உத்தரவைப் பெற்று, தீர்மானத்தை சட்டமன்றத்திலே கொண்டு வந்து, ஜல்லிக்கட்டை நடத்துவதற்கு அனுமதியைப் பெற்றுத் தந்தோம். உச்ச நீதிமன்றத்தால் அந்த வழக்கில்* stay *கொடுக்கப்பட்டபோது, இங்கேயிருக்கக்கூடிய நம்முடைய அவையினுடைய முன்னவரும்,*

முன்னாள் மத்திய அமைச்சர் அண்ணன் திரு. ராசா அவர்களும் நீதியரசரை சந்தித்து, இன்றைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஜல்லிக்கட்டிற்கு உத்தரவைப் பெற்றுத் தந்து, இந்தச் சட்டமன்றத்தில் சட்டமாக்கி, அந்த ஜல்லிக்கட்டை நடத்தினோம். 2016 வரையில் முன்னாள் முதலமைச்சர் அம்மையார் இருக்கிற வரையிலும்கூட ஜல்லிக்கட்டு நடந்தது. Animal Welfare Board of India–வினுடைய சில கட்டுப்பாடுகளைக் கடைப்பிடிக்காததன் விளைவாக ஜல்லிக்கட்டு தடைப்பட்டது என்பதை இங்கே பதிவு செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், திரு. S.R. இராஜா அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்தான் ஆரம்பித்தார், நான் ஒன்றும் ஆரம்பிக்கவில்லை. மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் தவறான பதிவை இந்தச் சட்டமன்றத்தில் பதிய வைத்துக்கொண்டிருக்கிறார். இது முற்றிலும் தவறு. தி.மு.க.–வும் காங்கிரஸும் மத்தியில் ஆளுகின்ற பொறுப்பில், இருந்தபோதுதான் காளை என்ற இனத்தை விலங்கினப் பட்டியலில் சேர்த்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதன் காரணமாகத்தான் ஜல்லிக்கட்டை நடத்தக் கூடாது என்று மத்திய அரசு தடை விதித்தது. அதுதான் உண்மை. அதிலிருந்துதான் விலக்கு பெற்று, நாங்கள் ஆளுகின்ற பொறுப்பில் இருந்தபோது, மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களைச் சந்தித்து, முறையிட்டதன் அடிப்படையில்தான் அவர்கள் உரிய அரசாணையைத் தந்து, அந்த அரசாணையைப் பெற்று வந்து இங்கு சட்டமன்றத்தில் தீர்மானமாக நிறைவேற்றி, மீண்டும் அதனை எடுத்துச்சென்று, மாண்புமிகு குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்று, அதற்குப் பின்புதான் ஜல்லிக்கட்டு என்ற நிகழ்வு தமிழகத்தில் அதிகாரபூர்வமாகக் கொண்டுவரப்பட்டது என்பதுதான் வரலாறு. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வரலாற்றை மறைத்து (குறுக்கீடு) நீங்கள் ஏதோ முன்பு நடந்த சம்பவங்களைச் சொல்கிறீர்கள். அதற்குப் பின்னால், மத்தியில் தி.மு.க.–வும் காங்கிரஸும் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, காளை என்ற இனத்தை விலங்கினப் பட்டியலில் சேர்த்ததன் அடிப்படையில்தான் ஜல்லிக்கட்டிற்கு உச்ச நீதிமன்றம் தடை விதித்தது. இதுதான் உண்மை; வரலாறு.

2022 ஏப்ரல் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் இதனைச் சுருக்கமாக முடித்துவிடுங்கள். 4* demands *இருக்கின்றன. மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016 ஆம் ஆண்டு வரை முன்னாள் முதலமைச்சர் அம்மையார் இருக்கும் வரை ஜல்லிக்கட்டு நடந்தது. சட்டமன்றத்தில் தீர்மானம் போட்டும்கூட அதற்கு உச்ச நீதிமன்றத்தில் அனுமதி தரவில்லை. மாண்புமிகு குடியரசுத் தலைவருக்கு அனுப்பினீர்கள். அப்போதும் உத்தரவு வழங்கவில்லை. மக்களுடைய மிகப் பெரிய போராட்டத்தின் விளைவாக, தமிழகம் மட்டுமல்ல, உலகம் முழுவதும் இருக்கக்கூடிய தமிழர்களுடைய போராட்டத்தின் விளைவாகத்தான் உத்தரவு பெறப்பட்டது என்பதையும் இந்த அவையில் நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.*

பிற்பகல் 1–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஒரு நிமிடம், நான் பேசிவிடுகிறேன். (குறுக்கீடு) உங்களைப் பேசுவதற்கு அனுமதிக்கிறேன். உங்களைப் பேச அனுமதிக்கிறேன். உங்களை அனுமதிக்கப் போகிறேன். (குறுக்கீடு) ஒரு நிமிடம். இன்றைய விவாதத்தை இந்த* level*–ல் கொண்டுபோய்க் கொண்டிருந்தால் நன்றாக இருக்காது. சுருக்கமாக நீங்கள் ஒரு வார்த்தை, முன்னாள் துணை முதல்வர் அவர்கள்.*

திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னவை எல்லாமே நீங்களும், காங்கிரஸ் கட்சியும் மத்தியில் ஆண்டபோது காளை இனத்தை விலங்கினப் பட்டியலில் சேர்ப்பதற்கு முன்னால் நடந்தவை. 1,000 வருடங்களாக ஜல்லிக்கட்டு நடைபெற்றது. அதை யாரும் மறுக்க முடியாது. எங்கள் ஊர் பெரியகுளத்தில் இருக்கின்ற எங்கள் தெருவில்கூட வருடா வருடம் ஜல்லிக்கட்டு நடக்கும். மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல், நாங்கள் சிறு வயதில், இளம் வயதில் காளையர்களாக இருந்த நேரத்தில், அந்தக் காளைகளை அடக்கிய வரலாறெல்லாம் இருக்கின்றன. ஆனால், நீங்கள் சொன்ன அனைத்துமே, மத்தியில் நீங்களும் காங்கிரசும் கூட்டணிக் கட்சியாக ஆட்சியில் இருந்தபோது காளை என்ற இனத்தை விலங்கினப் பட்டியலில் சேர்த்ததன் அடிப்படையில்தான் இதற்கு தடை விதிக்கப்பட்டது. இதுதான்*

வரலாறு. (குறுக்கீடுகள்) இருங்கள், நீங்கள் இடையில் குறுக்குசால் ஓட்டுகிறீர்களே?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் இப்படிப் பேசிக்கொண்டிருந்தால் அந்த அம்மையார் மேனகா காந்தி அவர்கள் வந்தாலும் வந்துவிடுவார்கள். பார்த்துக்கொள்ளுங்கள்.*

திரு. ஓ. பன்னீர்செல்வம்: *விதிக்கப்பட்ட தடையை உடைத்து, மீண்டும் ஜல், ஜல், ஜல் என்று ஜல்லிக்கட்டு நடப்பதற்குக் காரணம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இந்த விவாதம் நன்றாக இல்லை, இதனை முடித்துவிடுங்கள்.*

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழர்களின் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டுக்குத் தடை வருவதற்கு யார் காரணமாக இருந்தது?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அது குறித்து மற்றொரு நாள் விவாதத்தை வைத்துக்கொள்ளலாம்.*

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: *ஜல்லிக்கட்டுக்குத் தடை வருவதற்கு யார் காரணம்; ஜல்லிக்கட்டு தமிழ்நாட்டில் நடக்காமல் இருந்ததற்குக் காரணம், அன்றைக்கு ஆட்சியிலிருந்த நீங்கள்தான் காரணம், நீதிமன்றம் அல்ல, நீதிமன்றத்தில் நீங்கள் விளக்கம் கேட்டதற்கு எந்தவிதமான முடிவும் எடுக்கப்படவில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S.R. இராஜா அவர்கள். (குறுக்கீடு), அதிகமாகப் பேசியாயிற்று, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அமைதியாகத்தான் இருந்தேன். தளவாய் சுந்தரம், நீதிமன்றம் என்று சொன்னதால் பேசுகிறேன். நீதிமன்றத்தில்* Supreme Court–*ல்* case *இருந்தது. நான் அப்போது* World Bank Team–*ல் எகிப்தில்* tour *செய்துகொண்டிருந்தேன். அப்போது நான்* Law Minister. *தலைவரே எகிப்திற்கு தொலைபேசியில் அழைத்தார்கள்.* Case *வந்தாயிற்று.* Immediate *ஆக* case–*ஐப் பார்க்க வேண்டும். நீதான் வந்தாக வேண்டும் என்று கூறினார்கள்.* Tour–*ஐ* cancel *செய்துவிட்டு,* straight *ஆக நான் புதுடில்லி சென்று,*

அதன் பிறகு நான் அது குறித்துச் சொல்ல விரும்பவில்லை. அந்த case–ஐ வழிநடத்தி அன்றைக்கு விடுதலை வாங்கிக் கொடுத்து, அந்த case–ஐ நடத்துவதற்கு permission வாங்கிக் கொடுத்தவன் நான்தான். நான் சும்மா உட்கார்ந்துகொண்டிருக்கிறேன். அனைவரும் பேசிக்கொண்டிருக்கிறீர்களே? (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S.R. இராஜா அவர்கள். (குறுக்கீடுகள்) போதும். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் முற்றுப்புள்ளி வைத்துவிட்டார்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் முற்றுப்புள்ளியே வைத்துவிட்டார்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள், அமைதியாக இருங்கள், நான் சொல்கிறேன். அமைதியாக இருங்கள், நான் சொல்கிறேன் என்று சொல்கிறேன், (குறுக்கீடுகள்) சரி, சொல்லுங்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள், . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், அவர்கள் ஒன்றும் தவறாகச் சொல்லவில்லை, காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருக்கும்போது காளை மாடு இனத்தை அவற்றில் சேர்த்தார்கள் என்று சொன்னார்கள். சேர்க்கவில்லையென்றால் நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்கிறேன். காங்கிரஸ் கட்சியும் திராவிட முன்னேற்றக் கழகக் கட்சியும் ஆட்சியில் இருந்தபோது அவ்வாறு நடந்தது என்று கூறினார். அது அப்படி அல்ல, அது உண்மைக்குப் புறம்பான செய்தி, இருவரும் கூட்டணியில் இருந்தது உண்மை, எங்கள் கட்சி ஆட்சியில் இருந்தது உண்மை. ஆனால், PETA என்ற அமைப்பும், Blue Cross of India என்ற அமைப்பும் உச்ச நீதிமன்றத்தில் இதற்குத் தடை விதிக்க வேண்டுமென்று கோரினர். இவ்விரு அமைப்புகளும் இதற்குத் தடை பெற்றன. இதுதான் உண்மை. ஆனால், ஜல்லிக்கட்டைக் கொண்டு வந்தது இவர்கள் அல்ல, பொதுமக்கள். அவர்களின் போராட்டம்தான் கொண்டுவந்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காளை என்ற இனத்தை விலங்கினப் பட்டியலில் சேர்த்ததன் அடிப்படையில்தான்* Supreme Court *தடை விதித்தது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல்* PETA *அமைப்புதான் அந்தத் தடையைப் பெற்றார்கள். அந்தத் தடையை உடைத்தெறிந்து மீண்டும் ஜல்லிக்கட்டை நடத்தியது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அந்த* case*–ஐ வழி நடத்தியது மாண்புமிகு அவை முன்னவர்தான் என்று சொல்லிவிட்டார்கள்.*

5. மானியக் கோரிக்கைகள், 2022–2023, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 17–கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)
(ஆ) கோரிக்கை எண் 18–கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)
(இ) கோரிக்கை எண் 10–வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)
(ஈ) கோரிக்கை எண் 11–முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* S.R. *இராஜா அவர்கள், பேசுங்கள்.*

திரு. S.R. இராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்றும் நம்மை வழிநடத்திக்கொண்டிருக்கிற தலைவர் கலைஞர் அவர்கள் உறங்கும் திசை நோக்கி வணங்குகிறேன். மக்களோடு மக்களாக இருக்கும், என்றும் மக்கள் முதல்வர் என்று அனைத்துத் தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை வணங்கி மகிழ்கின்றேன். 50 ஆண்டுகாலம்*